**செ. கு. எண்:047** **நாள்: 20.04.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 20.4.2017

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், காந்தலவாடி மதுரா, கருவேப்பிலைபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு வெங்கடாஜலபதி என்பவரின் மகன் திரு. ஏழுமலை மற்றும் வானூர் வட்டம், சேமங்கலம் எடப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஏழுமலை என்பவரின் மகன் திரு. சிவக்குமார்;

தூத்துக்குடி மாவட்டம், தெர்மல் நகரைச் சேர்ந்த திரு. ராஜபாண்டி என்பவரின் மகன் திரு.விக்னேஷ்;

வேலூர் மாவட்டம், சாத்துமதுரை கிராமத்தைச் சேர்ந்த திரு. வீராசாமி என்பவரின் மகன்திரு. நரசிம்மராஜி;

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், எஸ். அய்யம்பாளையத்தைச் சேர்ந்த திரு. வேலாயுதம் என்பவரின் மகன் திரு. சம்பு;

கோயம்புத்தூர் வடக்கு வட்டம், குருடம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜமாணிக்கம் என்பவரின் மகன் திரு. ராமு;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிவண்ணன் என்பவரின் மனைவி திருமதி சாந்தி;

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, கருக்கட்டான்பட்டியைச் சேர்ந்த திருமதி கண்ணகி;

-----ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஓட்டேரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.V.இதயகிருஷ்ணன்; குமரன் நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.S.K.சையது ஆசாத்; செங்குன்றம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. V.முருகன்; கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.J.சார்லஸ்; ஸ்டான்லி மருத்துவமனை காவல் நிலையத்தில், சிறப்பு உதவி

ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.D.ஜெயவர்தன் மற்றும் நவீன காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு.P.சத்திய நாராயணன் ஆகிய காவலர்கள் பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**